நாள்.12.12.2024

**அசல் வழக்கு எண். 39/2016**

பெயர் – பாலசுப்பிரமணியன்

த/பெ – ராமச்சந்திரன்

<u>பி.வ.சா.2 – 7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பரக்கலக்கோட்டை கிராமத்தில் பொதுஆவுடையார் சிவன் கோவில் உள்ளது. அதனுடன் சேர்ந்து நாகநாத சுவாமி மற்றும் பாலடி காத்தவராயன் கோவில் உள்ளது. அது ஏற்கனவே சேரன்குல சின்னராமனுஜர் ஐய்யாங்கார் அவர்கள் குடும்பாத்தால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது என்றால் ஐய்யாங்கார் குடும்பம்தான் ஆனால் சின்னராமனுஜா ஐய்யாங்கார் யார் என்று தெரியாது. மேற்படி கோவிலுக்கான சொத்துக்கள் அனைத்தும் அவர்கள்தான் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. கோவிலுக்கு 2 பரம்பரை அரங்காவலர்கள் சடகோபன் ராமனுஜர் மற்றும் S.R.ராமனுஜர் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும்.அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். S.R.ராமனுஜர் மகன் 7ம் பிரதிவாதி தற்போது பரம்பரை அறங்காவலராக உள்ளார் என்றால் ஆமாம். சடகோபன் ராமனுஜர் இறந்துவிட்டதால் அவரது மனைவி 8ம் பிரதிவாதி பரம்பரை அறங்காவலராக உள்ளார் என்றால் ஆமாம். நிர்வாகம் சம்பந்தமாக ஏற்கனவே பரம்பரை அறங்காவலர்கள் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் ஆமாம். சடகோபன் ராமனுஜர் உயிருடன் இருந்த காலத்தில் கோவிலுக்கு சொந்தமான பல சொத்துக்களை விற்றுவிட்டார் என்றால் தெரியாது. அது போல் விற்றசொத்துக்கள் சம்பந்தமான 5ம் பிரதிவாதி தனி நடவடிக்கை எடுத்துள்ளார். வாதியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வாதி மாரியப்பன் கோவிலுக்காகதான் நடவடிக்கை எடுத்துவருகிறார் என்றால் தெரியாது. கோவில் நிர்வாகம் 2 பரம்பரை அறங்காவலர்களால் செய்யப்படுகிறது என்றால் ஆமாம். அதற்கு துணையாக இந்து அறநிலைதுறை செயல்அலுவலர் 3ம் பிரதிவாதி இருக்கிறார் என்றால் ஆமாம். கோவில் சம்பந்தமாக எந்த திட்டமிடல், செயல்பாடுகள் அனைத்தும் பரம்பரைஅறங்காவலர்கள் சம்மதம் இல்லாமல் 3ம் பிரதிவாதி செய்யமுடியாது என்றால் தெரியாது. வாதி அசல் வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. நான் எதற்காக சாட்சியம் சொல்லவந்துள்ளேன் என்றால் நான்

வருடத்திற்கு ஒரு நாள் கார்திகை மாதம் கடைசி சோமவாரத்திற்கு நான் நடத்துவேன் அதன் அடிப்படையில் சாட்சி சொல்ல வந்துள்ளேன்.

**7ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Sd/-S.Kavipriya,B.A.L.L.B

District Munsif, Pattukkottai.